DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 188/2018 DW : 1

Name : விஸ்வநாதன் Age –

S/o : தங்கவேல் Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

Date: 13.11.2025.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1) இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை நான் சொன்னதன் அடிப்படையில் தான் வழக்கிஞர் தாக்கல் செய்துள்ளார். என்னுடைய பதிலுரையில் சொத்துக்கள் விடுப்பட்டுள்ளன மற்றும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேன் ஆனால் அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய பதிலுரையில் நான சொல்லியுள்ளது போல் ஏற்கனவே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றாலும் அவர் சொத்தை விற்கும் போது நாங்கள் கையெழுத்து போடுவோம் என்றும், எங்கள் சொத்தை விற்கும் போது அவர்கள் கையெழுத்து போடுவார்கள் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். பொது சொத்தை விற்கும் போது 3 பேரும் கையெழுத்து போடுவோம். நான் என்னுடைய பிதுராஜ்ஜித சொத்தை யாருக்கு எழுதவைக்கவில்லை. நான் கிரையம் வாங்கிய சொத்தை என் மனைவி பெயருக்கு எழுதிவைத்துள்ளேன். நான் என்னுடைய பதிலுரையில் வாய்மொழியாக என் பாகத்திற்கு வந்த சொத்தை என் மனைவி பெயருக்கு எழுதியுள்ளேன் என்று குறிப்பிட்டேன் என்றால் அது தவறு. வாதியும் நானும் தான் பள்ளிப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த வழக்கில் நாங்கள் இருவரும் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டோம் என்று சொல்லவில்லை. தாவா ஏ மற்றும் பி சொத்து பூர்வீக

சொத்துக்கள் தான். அதில் பாகம் கோரி என் தந்தையின் சகோதரிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

2) தாவா ஏ மற்றும் பி சொத்துக்களில் என் தந்தை உடன் பிறந்தவர்களுக்கு எந்த வித உரிமை கிடையாது. அவர்களை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. சில சொத்துக்களில் அவர்களுக்கும் உரிமை உள்ளது. நான் மனைவி பெயரில் எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய சகோதரர்கள் யாரும் கையெழுத்து போடவில்லை. இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி என் பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியாது. வாதி சொல்வது உண்மை என்றும், அதில் தனக்கு ஒரு பாகம் உள்ளது என்று 2ம் பிரதிவாதி பதில் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனக்கு தனி வருமானம் கிடையாது என்றாலும் கூட்டு குடும்ப சொத்தில் தான் என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் கிரையம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

3) மணி மற்றும் பால்ராஜ், ஆகியோரும் எனக்கு நல்ல உறவு முறையில்லாததால் அவர்கள் எனக்கு பாதகமாக சாட்சி அளிப்பார்கள். என்னுடைய பிள்ளைகளும், வாதியின் பிள்ளைகளும் திருத்தணி நீதிமன்றத்தில் பால்ராஜ் மற்றும் ஆயம்மாள் மீது அதே நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அதே போல் திருப்பதி நீதிமன்றத்திலும் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. தாவா சொத்து அனைத்து பாகப்பிரிக்கவேண்டி சொத்து என்றால் சரியல்ல. நான் என் மனைவி பெயரில் எழுதிவைத்த செட்டில்மெண்ட் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரியப்படி நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2025.11.13 17:49:09 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.